# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

மலர் : 7 Volume: 7 | இதழ்: 11 Issue: 11 | ஆகஸ்ட் : 2023 August : 2023 | ரூ.20/- Rs.20/-



## SHRI MAHA MERU MANDALI TRUST
Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**48வது பாராயணம் - 07.07.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ மஹேஸ்வரி அம்பாள் சமேத மல்லிகேஸ்வரர் திருக்கோவில்**
அசோக் நகர், சென்னை - 600 083.

**49வது பாராயணம் - 14.07.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ கோமளாம்பிகா சமேத கோமளேஸ்வரர் திருக்கோவில்**
புதுப்பேட்டை, சென்னை - 600 002.

**50வது பாராயணம் - 21.07.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகஸ்தீஸ்வரர் திருக்கோயில்**
நுங்கம்பாக்கம், சென்னை - 600 039.

**51வது பாராயணம் - 28.07.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்மன் திருக்கோவில்**
காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்




**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 48

**மித்$^{1}$ரஸ்ய சர்ஷணீ த்$^{4}$ருத$^{1}$: ச்ரவோ தே$^{3}$வஸ்ய ஸாநஸிம்/**

**ஸத்$^{1}$யம் சித்$^{1}$ர ச்ரவஸ்த$^{1}$மம்//**

**- தைத்திரீய ஸம்ஹிதை**

**பொருள் :**

*ப்ரஜைகளை ரக்ஷிக்கும் ஸுர்ய தேவனுடைய பூஜிக்கத்தகுந்ததும் அழிவற்றதும் கேட்பவர் மனத்தைக் கவர்வதில் சிறந்ததுமான கீர்த்தியையும் பெருமையையும் த்யானிக்கின்றேன்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: |*

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 7 இதழ்: 11

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| ஆவணி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 11 |
| ஸ்ரீமத் பாகவதம் | 14 |
| ஆதிசங்கரர் | 17 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 20 |
| முதுரை (ஔவையார்) | 22 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 23 |
| தர்மத்தின் குரல் | 24 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 25 |
| அறிவோம் ஆழ்மனதின் | 31 |
| ஆசான் | 33 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 39 |
| சாதனைப்பறவைகள் | 43 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 45 |
| தருவின் நிழலில் | 48 |
| அட்ட வீரட்டத் தலங்கள் | 52 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI**
City Union Bank, Velachery Branch
A/c No. 510909010005286
IFSC : CIUB 0000262

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**D. சூரியநாராயணன்**
Cell : 98841 05302
**R. வெங்கட்ராமன்**
Cell : 94434 95950

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு!

## 60. பக்தியின் விசேஷம்

*மனிதன் தன்னுடைய மரணகாலத்தில் பகவான் ரட்க்ஷிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். அதற்கு சுலபமான வழி* **"பக்தி மார்க்கம்"** *தான். மற்ற சாதனங்கள், அதாவது ஒரு யோகமோ, அல்லது ஒரு யாகமோ அல்லது ஜபமோ மனிதனின் அந்திம காலத்தில் பகவானுடைய கிருபையை கொடுக்காது. பக்தி மார்க்கத்தில் ஒருவன் பகவானுடைய திருவடியில் சரணம் அடைந்தால் அந்த பக்தரை அந்திம காலத்தில் பகவான் ரட்க்ஷிக்கிறார்.*

**"பக்தி மார்க்கம்"** *என்றால் என்ன? வீடு முழுவதும் பகவானின் படங்களை மாட்டிவைத்து, விடியற்காலையிலேயே எழுந்து குளித்து, நிறைய புஷ்பங்களை அலங்காரம் செய்து பிறகு விமர்சையாக பூஜை செய்ய வேண்டும் என்பது அல்ல. அப்படி செய்தால் அது கர்ம மார்க்கம் ஆகிவிடும்.*

*யுகங்கள் மாற மாற ஜனங்களின் சக்தி குறைந்துக் கொண்டே வருவதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.* **"கிருத"** *யுகத்தில்* **"தியானம்"** *செய்யும் சக்தி இல்லாது போனபோதுதான்* **"திரேதா"** *யுகத்தில் மக்கள்* **"யாகம்"** *செய்ய ஆரம்பித்தார்கள். யாகம் செய்ய ஆசாரம் குறைந்து போனதால்* **"துவாபர"** *யுகம் வந்தபோது* **"அர்ச்சனாதி"** *மார்க்கத்திற்கு வந்தார்கள். இந்த* **"கலியுகத்தில்"** *மேற்கண்ட மூன்றுக்கும் நமக்கு சக்தி கிடையாது. அதனால் பகவானுடைய நாமத்தை சொல்லுவதுதான் சிறந்த வழி.*

*வாக்காலும், மனதாலும், செயலாலும், உட்கார்ந்தாலும், நின்றாலும், எதைச் சாப்பிட்டாலும், அனுபவித்தாலும் எல்லாவற்றையும் பகவானுக்கு*

அர்ப்பணம் செய்துவிட வேண்டும். எது செய்தாலும் **"கிருஷ்ணார்ப்பணம்"** என்று சொல்ல வேண்டும்.

பக்தியின் வெளிப்பாடு எப்படி இருக்க வேண்டும் என்றால். நாம் ஒரு சமயம் பகவானுடைய ரூபத்தை பார்க்க வேண்டும். அவருடைய சரித்திரத்தைக் கேட்க வேண்டும். அவருடைய நாமாக்களை எப்போதும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். ஒரு சமயம் அழவேண்டும், ஒரு சமயம் பாட வேண்டும், ஒரு சமயம் கர்ஜிக்க வேண்டும். ஒரு சமயம் குதிக்க வேண்டும். ஒரு சமயம் அப்படியே பயித்தியம் பிடித்தவன்போல் உட்கார்ந்திருக்க வேண்டும். சைதன்ய மஹா பிரபுவும், பிரஹலாதனும் அப்படித்தான் இருந்தார்கள்.

எல்லா உயிர்களிலும் பகவான் இருக்கிறார். அதனால் புழு, பூச்சி, நாய், கழுதை போன்ற மிருகங்கள், பறவைகள் முதலியவற்றை பகவானாக பார்க்க வேண்டும். மனது பகவானின் சரணத்தில் ஆழமாக பதிந்துவிட்டால் சரீரத்தில் உள்ள அபிமானம் போய்விடும். அப்போது பசியோ, தாகமோ, துக்கமோ, சோகமோ, பயமோ, மரணபயமோ, பீதியோ நம்மை பாதிக்காது.

பகவானுடைய ஸ்வரூபம்தான் இந்த ப்ரபஞ்சம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் நம்முடைய கண்களுக்கு அவை ஆகாசமாகவும், காற்றாகவும், நெருப்பாகவும், நீராகவும், பூமியாகவும் பலதரப்பட்ட ஜந்துக்களாகவும் தெரிந்து விருப்பு, வெறுப்புகளில் நாம் ஈடுபட்டு நாம் மாயைக்கு வசமாகி அதில் விழுந்துவிடுகிறோம். மனிதன் **"சர்வம் பிரம்ம மயம்"** என்ற ஞானத்தை அடைந்துவிட்டால் பிரச்சனைகள் இல்லை.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## சோபக்ருது வருஷம் - ஆவணி மாத விசேஷங்கள்
**(ஆகஸ்ட் 18.08.2023 முதல் செப்டம்பர் 17.09.2023 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *20.08.2023* | ஆவணி *3* | ஞாயிறு | நாக சதுர்த்தி |
| *22.08.2023* | ஆவணி *5* | செவ்வாய் | ஷஷ்டி |
| *24.08.2023* | ஆவணி *7* | வியாழன் | அனுஷம் |
| *25.08.2023* | ஆவணி *8* | வெள்ளி | ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம் |
| *27.08.2023* | ஆவணி *10* | ஞாயிறு | ஏகாதசி |
| *28.08.2023* | ஆவணி *11* | திங்கள் | ப்ரதோஷம் |
| *29.08.2023* | ஆவணி *12* | செவ்வாய் | ருக் உபாகர்மா, ஹயகரீவர் ஜெயந்தி |
| *30.08.2023* | ஆவணி *13* | புதன் | யஜூர் உபாகர்மா |
| *31.08.2023* | ஆவணி *14* | வியாழன் | காயத்ரீ ஜபம், பௌர்ணமி |
| *03.09.2023* | ஆவணி *17* | ஞாயிறு | மஹா சங்கடஹர சதுர்த்தி |
| *05.09.2023* | ஆவணி *19* | செவ்வாய் | ஷஷ்டி |
| *06.09.2023* | ஆவணி *20* | புதன் | க்ருத்திகை, கோகுலாஷ்டமீ |
| *10.09.2023* | ஆவணி *24* | ஞாயிறு | ஏகாதசி |
| *12.09.2023* | ஆவணி *26* | செவ்வாய் | ப்ரதோஷம் |
| *14.09.2023* | ஆவணி *28* | வியாழன் | அமாவாஸை |
| *17.09.2023* | ஆவணி *31* | ஞாயிறு | ஸாம உபாகர்மா |

### 14.09.2023 வியாழக்கிழமை - அமாவாஸை

சோபக்ருது நாம ஸம்வத்ஸரே, தக்ஷிணாயனே வர்ஷ ருதௌ, சிம்ம மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து குரு வாஸர யுக்தாயாம் பூர்வ பல்குனி நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்

# ஹயக்ரீவர் ஜயந்தி

**பரித்ராணாய ஸாது4னாம் விநாஸாய ச சது3ஷ்க்ருதாம்/**
**த4ர்மஸம்ஸ்தாபனார்தா2ய ஸம்ப4வாமி யுகே3 யுகே3//**
**(கீதை 4-8)**

*"தர்மத்தை நிலைநாட்ட நான் யுகந்தோறும் வெளிப்பட்டுக் கொண்டு இருக்கிறேன்".*

*ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரங்களை* **"தசாவதாரங்கள்",** *அதாவது 10 அவதாரங்கள் என்று கூறுவார்கள். இவற்றில் கடைசியில் உள்ள* **"கல்கி"** *அவதாரம் தவிற மற்ற ஒன்பது அவதாரங்களையும் பகவான் எடுத்துவிட்டார். ஆனால் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் மொத்தம் 22 என்று கூறுகிறது. பகவான் எடுத்த மொத்த அவதாரங்கள் 22 தானா? இல்லை! பகவானின் அவதாரங்கள்*
**"ஹரே:அவதாரா:அஸங்க்யேயா:ஹரி=மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் எண்ணற்றவையன்றோ"** *என்கிறது ஸ்ரீமத் பாகவதம் (பா 1-3-26) பகவான் அவ்வப்போது அவதாரங்கள் எடுத்துக்கொண்டே தான் இருக்கிறார்.*

*அப்படி பகவான் எடுத்த அவதாரங்களில் ஒன்றுதான்* **"ஸ்ரீஹயக்ரீவர்"** *அவதாரம்*

**"ஸ்ரீஹயக்ரீவர்"** *என்றால் எனன பொருள்? பகவான் இந்த அவதாரத்தை ஏன்? எப்போது எடுத்தார்?*

**ஹயா + கிரிவா** *= ஹயகிரீவர். ஸம்ஸ்கிருதத்தில்* **"ஹயா"** *என்றால்* **"குதிரை"** *என்றும்* **"கிரிவா"** *என்றால்* **"கழுத்து"** *என்றும் பொருள்.*

*ஒரு முறைபெருமானின் நாபிக்கமலத்தில் உள்ள ஓர் இதழில் இரண்டு தண்ணீர் திவலைகள் தோன்றி* **"மது" "கைடபர்"** *என்றஇரு அசுரர்களாக மாறினார்கள்.*

அந்த இரண்டு அரக்கர்களும் இந்த உலகத்தைத் தாங்கள்தான் ஆளவேண்டும் என்று நினைத்தார்கள். அப்படி ஆளவேண்டுமானால் உலகை படைக்கும் தொழிலைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டும் என நினைத்து, குதிரை வடிவில் சென்று, நான்கு வேதங்களின் துணை கொண்டு சிருஷ்டி தொழிலை நடத்திக்கொண்டிருந்த பிரம்மாவிடம் சண்டையிட்டு வேதங்களைப் பறித்துச் சென்றுவிட்டனர். வேதங்கள் இல்லையானால் சிருஷ்டியின் அர்த்தமே இல்லையே. உலகை இருள் சூழ்ந்ததது. பிரம்மா செய்வது அறியாது திகைத்து பெருமாளை சரண் அடைந்தார்.

வேதங்களை மீட்க பெருமாள் பாதாள உலகம் சென்றார். அங்கு அந்த அசுரர்கள் இருவரும் குதிரைவடிவில் இருந்ததால் பகவானும் குதிரை முகம் கொண்டு ஹயக்ரீவராக தோன்றினார்.

பகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்ரவண பௌர்ணமியன்று திருவோண நக்ஷத்திரத்தில் ஸ்ரீ ஹயக்ரீவராக அவதரித்தார். கருட புராணத்திலும், ஸ்ரீதேவி பாகவதத்திலும் ஸ்ரீஹயக்ரீவ புராணம் விரிவாக விளக்கப்பட்டது.

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் வடிவமான "ஹயக்ரீவர்" **"மது" "கைடபர்"** ஆகிய இருவரிடமும் போரிட்டு அவர்களைக் கொன்று வேதங்களை மீட்டு வந்தார். அசுரர்கள் கை பட்டதால் வேதங்கள் பெருமை குன்றியதாக இருந்தன. **"ஹயக்ரீவர்"** அந்த வேதங்களை உச்சி முகர்ந்ததால் அந்த மூச்சுக்காற்றால் வேதங்கள் புனிதமடைந்தன. அந்த வேதத்தை நான்முகனுக்கு உபதேசம் செய்தார். அசுரர்களுடன் போரிட்டதால் "ஹயக்ரீவர்" உக்கிரகமாக இருந்தார். அவரை குளிர்விக்க லக்ஷ்மிதேவி அவர் மடியில் அமர்ந்தார்.

அதனால் அவர் **"லக்ஷ்மி ஹயக்ரீவர்''** என்று போற்றப்படுகிறார். வேதங்களை மீட்டவர் என்பதால் **"ஹயக்ரீவர்''** கல்விக்கு தெய்வமாகிறார்.

கலைமகளுக்கே ஞானத்தை அளித்த ஸ்ரீஹயக்ரீவரைத் துதித்தால் அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

**ஞானாநந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகா (ஆ) க்ருதிம்**
**ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே**

**பொருள் :** ஞானமும், ஆனந்தமயமானவரும், தூய்மையான ஸ்படிகம் போன்றதேகத்தை உடையவரும், சகல கல்விக் கலைகளுக்கும் ஆதாரமுமானவரான ஸ்ரீஹயக்ரீவரை நான் உபாசிக்கிறேன்.

இந்த வருடம் ஸ்ரீஹயக்ரீவர் ஜயந்தி 29.08.2023 செவ்வாய்கிழமை நிகழ உள்ளது. அன்றைய தினம் நாமும் ஸ்ரீஹயக்ரீவரை பூஜித்து, பிரார்த்தித்து நன்மைகளை அடைவோம்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**


உ

ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

திருச்சி

## யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்

**நாள் : 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை**

**இடம் : யோகா கல்யாண மண்டபம்**

அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி

**13 வயதிற்கு மேல் உள்ள அந்தண பெண்குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்து கொள்ளலாம்.**

**தொடர்பு : 94434 53053 / 94431 43697**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 52

## அத்தியாயம் – 3

## கர்ம யோகம்

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம் ஞானிகளுக்கு உரிய ஞானயோகத்தையும், யோகிகளுக்கு உரிய கர்மயோகத்தையும் கூறிவிட்டு "அர்ஜுனா இரண்டின் இயல்புகளையும், பயன்களையும் சொல்லிவிட்டேன். இரண்டின் தீர்வும் ஒன்றுதான். இரண்டில் எதுவேண்டும் என்று நீயே தேர்ந்தெடுத்துக்கொள்'' என்றார். இதைக் கேட்ட அர்ஜுனனுக்கு மேலும் மேலும் குழப்பம் ஏற்பட்டது.

**"புத்தியோகம்'', "கர்மயோகம்''** இவற்றில் **"புத்தியோகம்"** என்பது புத்தியைக் கொண்டு மனதை பேலன்ஸ் செய்வது அதாவது புத்தியால், எண்ணத்தால், தியானத்தால் சூக்ஷ்மமான விவேகத்தால் யாரால் மனதை பேலன்ஸ் செய்ய முடிகிறதோ அவர்கள் **"புத்தியோகிகள்".** யாருடைய மனதில் முடிந்துபோன காரியங்களின் சிந்தைகள் நிறைந்திருக்கிறதோ அவர்களால் இந்த சூக்ஷ்ம புத்தியை அடைய முடியாது. அப்படி உள்ளவர்களுக்கு கர்மயோகம் வேண்டும். அதனால் தான் பகவான் கர்மயோகத்தையும், புத்தியோகத்தையும் கூறினார்.

குருவிடம் பாடம் படிக்கும் போது சிஷ்யனுக்கு சந்தேகம் வந்தால் குருவிடம் கேள்வி கேட்கும் உரிமை, சுதந்திரம் அவனுக்கு உண்டு. அதனால்தான் அர்ஜுனன் பகவானைத் தன் குருவாக ஏற்று தன் சந்தேகத்தை கேள்வியாக கேட்கிறான்.

**ஜ்யாயஸீ சேத்கர்மணஸ்தே மதா புத்3தி4ர்ஜநார்த3ந/**

**தத்கிம் கர்மணி கோ4ரே மாம் நியோஜயஸி கேஸவ// (கீதை 3-1)**

**பொருள் :** *"ஜனார்தனா" கர்மத்தைக் (தொழிலை) காட்டிலும் ஞானமே (அறிவே) சிறந்தது என்று நீ எண்ணுகிறாய் என்றால் என்னை ஏன் இந்தக் கோரமான காரியத்தில் ஏவுகிறாய் கேசவா?*

*அர்ஜுனன் தொடர்ந்து கேட்கிறான்.....*

**வ்யாமிஸ்ரேணேவ வாக்யேன புத்3தி4ம் மோஹயஸீவ மே/**

**ததே3கம் வத3 நிஸ்சித்ய யேன ஸ்ரேயோஹமாப்நுயாம்//**

**(கீதை 3-2)**

**பொருள் :** *குழம்பியது போன்ற பேச்சினால் என் புத்தியைக் கலக்குகிறீர்கள் போலிருக்கிறதே! எதனால் நான் மேன்மையை அடைவேனோ, அந்த ஒன்றைத் தீர்மானித்து கூறுங்கள்.*

**விளக்கம் :** *அர்ஜுனனின் நிலைமை, கலங்கிய குளத்தை மேலும் குழப்பியது போல் ஆனது. அதனால்தான் அவன் பகவானிடம் "கிருஷ்ணா எதற்காக இவ்வளவு விஷயங்களைக் கூறி குழப்புகிறாய்? ஞானமா? புத்தியா? கர்மமா? இவற்றில் நான் எதை தேர்ந்தெடுக்க? என்று கேட்கிறான்.*

*இந்த இடத்தில் இந்தியா உருவாக்கிய மிகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவரான சர் சி.வி.ராமன் அவர்களுடைய புத்தகத்தில் படித்த ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.*

*சர்.சி.வி. ராமன் வீட்டில் மூன்று வயது குழந்தை ஒன்று இருந்தது. ஒரு நாள் பலத்த மழை பெய்தபோது அந்த குழந்தை சர்.சி.வி. ராமனிடம் "தாத்தா, இந்த மழை எப்படி பெய்கிறது?' என்று கேட்டான். திரு. ராமனுக்கு ஒரே சந்தோஷம். இந்த குழந்தை இந்த வயதில் இப்படிப்பட்ட கேள்வியை கேட்கிறதே என்று*

நினைத்து சூரிய கதிரால் கடல் தண்ணீர் ஆவியாகி பின் மேகமாகி மழை பொழிவது வரையிலும் ஒரு கருத்தரங்கில் பேசுவதுபோல் நீண்ட விளக்கம் அளித்து "புரிந்ததா?" என்று குழந்தையிடம் கேட்டார். அதற்கு குழந்தை "தாத்தா நான் மழை எப்படி பெய்கிறது என்றுதானே கேட்டேன்? நீங்கள் ஏதேதோ எல்லாம் சொல்றீங்களே' என்று கூறியது. ராமனுக்கு தர்மசங்கடமாக ஆகிவிட்டது. அந்த நேரத்தில் அந்த குழந்தையின் தாய் வந்து "கண்ணா, இங்கே வா. யானை தன் தும்பிக்கையில் தண்ணீரை எடுத்து வாரி இறைக்குமே இல்லையோ! அதுபோல வானத்துல நிறைய யானைகள் தங்கள் தும்பிக்கைகளால் தண்ணீரை வாரி இறைக்கும்போது அது மழையாக பெய்கிறது' என்று விளக்கினாள். மூன்று வயது குழந்தைக்கு இது போதும் என்று அவள் நினைத்தாள்.

இதுபோல் பகவான் கிருஷ்ணன் சொல்லிக் கொடுத்திருந்தால் அர்ஜுனனுக்கு புரிந்திருக்கும். ஆனால் எல்லாவற்றையும் கூறிவிட்டு "ஏதாவது ஒன்றைஎடுத்துக்கொள்'' என்று கூறியதுதான் அர்ஜுனனை மேற்கண்ட கேள்வியை கேட்கவைத்தது.

அடுத்துவரும் மூன்றாவது ஸ்லோகம் முதல் பகவான் அர்ஜுனனின் கேள்விக்கு விளக்கம் அளிக்கிறார்.

கர்மயோகம் தொடரும்...

**இரங்கல் செய்தி**

வேதபாரதி சாம வேத வகுப்பு பொறுப்பாளர் ஸ்ரீ கணபதி சுப்ரமணியம் அவர்கள் பார்யாள் ஸ்ரீமதி உமா அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். ஸ்ரீமதி உமா கணபதி சுப்ரமணியம் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு வேதபாரதி ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறது.

கணபதி சுப்ரமணியம் - 9962078472

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி பகுதி - 31

## ஸ்கந்தம் 3

**கபில பகவான் அவதாரம். (ஸ்கந்தம் 3 = அத்தியாயம் 31 – ஸ்லோகங்கள் 1 முதல் 11 வரை, 22 முதல் 26 வரை)**

**ஏழு முதல் பத்து மாதம் வரை உண்டான வளர்ச்சி**

*கர்ப்பபையில் இருக்கும் சிசுவிற்கு ஏழாவது மாதம் முதல் சுகதுக்கங்களைப் பற்றிய நினைவு உண்டாகி கருப்பையில் ப்ரசவக் காற்றினால் (சூதி வாதை) வருந்தி தாயின் வயிற்றில் புழுபோல் நில்லாமல் சுழன்றுகொண்டே இருப்பான். அப்போது அவனுக்கு பூர்வ ஜென்மங்கள் ஞாபகத்திற்கு வரும் (ஜன்ம ஸதோத்பவம்) அப்போது அவன் இனி என்ன பிறவி வருமோ? என்னென்ன துன்பங்கள் வருமோ? தன்னை சுமக்கும் தாயும், உறவினர்களும் இந்த பிறவிச் சூழலிலிருந்து விடுபட உதவுவார்களா? என்று நினைத்து அஞ்சுவான். அப்போது அவன் தான் இந்த கருப்பையில் இருக்க காரணமான பகவானை நினைத்து கரம் கூப்பித் தொழுவானாம்.* **(பா ஸ்க 3, அத்தி 31 ஸ்லோ 10, 11)** *என்ன சொல்லி தொழுவான்.*

**ஜந்துர்வாசா (ஜந்து சொல்லுகிறான்)**

*என்னைப் போன்ற பாவி எவரும் இருக்கமாட்டார்கள். எவ்வளவோ வாய்ப்புக்கள் கிடைத்தும் துர்மதியால் நான் அந்த பகவானின் திருவடிகளைச் சரண் புகவில்லை. மாயைக்கு ஆட்பட்டு பஞ்சபூதங்களாலும், பத்து பொறிகளாலும் கட்டுப்பட்டு என்னுடைய முன் வினைப்பயனால் இங்கு கர்பவாசம் இருக்கிறேன். மாயைக்கு ஆட்படாத, பூரணஞான வடிவான அந்த பகவான் என் இதயத்தில்*

*வாசம் செய்கிறார். அவரையே சரணமடைகிறேன். இப்போது முக்காலத்தையும் உணரும் சக்தியை எனக்கு கொடுத்திருப்பவர் அந்த பகவான் ஒருவரே. என் மூன்று விதமான தாபங்களையும் போக்கி அமைதி பெற அவரையே நமஸ்கரிக்கிறேன். எனக்கு எப்போது விடுதலை கிட்டுமோ?*

*பத்து மாதங்களே ஆன இந்த ஜீவனுக்கு இப்படிப்பட்ட ஞானத்தை, பகவானே உங்களைத் தவிர வேறு யாரால் அளிக்க முடியும்? உங்களை கைகூப்பி நமஸ்கரித்து உம்மையே சரணடைகிறேன். இந்த கருக்குழி எனக்கு மிகுந்த துன்பமாய் இருக்கிறது. ஆனாலும் வெளி உலகம் இன்னும் அதிகமாக அச்சுறுத்துகிறது. பகவானே இந்த கர்பத்திலிருந்து வெளிவந்ததும் தபஸ் செய்து, உங்களை ஆராதனை செய்து, ஞானத்தை அடைவேன் என்றெல்லாம் அந்த ஜீவன் கருப்பையில் இருக்கும்போது வேண்டுகிறது (பாக ஸ்க 3, அத்தி 31, ஸ்லோகங்கள் 12 முதல் 21)*

பத்து மாதங்கள் கழித்து சூதிகா வாயுவினால் தலை கீழாகத் தள்ளப்பட்டு பூமியில் ரத்தத்திலும், மூத்திரத்திலும் விழுந்து மலத்தில் உண்டான புழுபோல் துடிக்கிறான். கர்ப்பபையில் இருந்த சிசு துன்பப்பட்டாலும் ஞானம் இருந்தது. ஆனால் கர்பத்திலிருந்து வெளியில் விழுந்ததும் எல்லாம் மறந்து விபரீதமான அறிவை பெற்றவனாய் கதறுகிறான்.

கபில பகவான் தொடர்ந்து ஜீவனின் நிலைமையை தன் தாய்க்கு விளக்குகிறார்.

குழந்தை பிறந்தபின் அதை சரியாக வளர்க்கத் தெரியாதவர்கள் அக்குழந்தை பசியால் அழும்போது அது வயிற்று வலியால் அழுகிறது என்று நினைத்து வேப்பெண்ணெய்யைத் தடவுவார்கள். அது வயிற்று வலியால் அழும்போது பசியென்று நினைத்து பாலைக் கொடுப்பார்கள். வியர்வையாலும் பூச்சிகள்

கடிக்கும்போது சொறிந்துகொள்ளவோ, எழுந்து உட்காரவோ சக்தியற்று விளங்குகிறது. இவ்வாறு ஐந்து வயதுவரை குழந்தைப் பருவம்.


பிறகு காளைப்பருவத்தில் விதம்விதமான விருப்பங்களால் அலைக்கழிக்கப்படுகிறான். அந்த விரும்பியது கிடைக்காவிட்டால், சாதிக்க முடியாமல் துக்கமடைகிறான். வயது ஆக ஆக கர்வமும் கோபமும் வளர்கிறது. தன்னைப் போன்றவர்களுடன் பகைமை கொள்கிறான். அது அவனுடைய அழிவிற்கே காரணமாகிறது. வயிற்றுக்காகவும், இன்ப சுகத்திற்காகவும் பாடுபடும் ஜீவன் பாவாத்மாக்களோடு நட்புகொண்டு பாவச் செயல்களில் ஈடுபட்டவனாகி நரகத்தையே அடைகிறான்.

தொடரும்...

ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை
ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்
(80 G Available)

756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்

1. கோ பூஜை செய்ய 2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய –
(மஹாளய பட்ச காலத்தில்)



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : ஸ்ரீ நடராஜன்
ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023
8940224744 / 9363111799

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

ஆதவன் அத்தியாயம் – 6 அவதார மஹிமை பாகம் 22

## காசியை நோக்கி

சங்கரர் காசியில் இருக்கும் போது தினமும் கங்கைக்கு பூஜை பண்ணி அதன் பிறகு கங்கா ஸ்நானம் பண்ணி கங்கையை ஸ்துதி பண்ணி விஸ்வநாதர் தரிசனம் செய்வார். கங்கையைக் கண்ட ஆசார்யார் தாயைக் கண்டதுபோல் மகிழ்வுற்றார். அந்த கங்காதேவி மீது ஒரு அஷ்டகத்தைப் பாடினார். அதுதான் ஒன்பது ஸ்லோகங்களைக் கொண்ட "கங்காஷ்டகம்". அதில் வரும் ஏழாவது ஸ்லோகம் சங்கரரின் கங்கா பக்தியின் உதாரணத்திற்கு இந்த ஸ்லோகம் ஒன்றே போதும்.

பகவதி தவ தீரே நீரமாத்ராசனோ ஹம்
விகத விஷய த்ருஷ்ண : க்ருஷ்ணமாராதயாமி/
ஸகலகலுஷபங்கே ஸ்வர்கஸோபானஸங்கே
தரளதர தரங்கே தேவி கங்கேச ப்ரஸீத// (7)

பொருள் : பகவதி தேவியான கங்கா தேவியே மின்னும் அலைகளைக் கொண்டவளே, எல்லா பாவங்களையும் அகற்றுபவளே, சுவர்க்கத்தின் படிக்கட்டாக அமைந்தவளே, உன் கரையோரம், உன் தீர்த்தத்தை மட்டும் பருகி ஸ்ரீகிருஷ்ணரை ஆராதிக்கிறேனே, மனமிறங்கி அருள்வாய்.

இவ்விதம் காசியில் இருக்கும்போது ஆசார்யரின் வயது பதினொன்று மட்டுமே. இந்த சிறிய வயது ஞானியைப் பற்றி மக்களுக்கு தெரியவருகிறது. காசி மஹாராஜாவே அவரை பார்க்க வருகிறார். பல பண்டிதர்கள் வந்து ஆசார்யரிடம் ஸம்வாதம் செய்து

சந்தேகத்தெளிவு பெற்றனர். ஆசார்யர் பகவத்கீதை குறித்தும் பத்து உபநிஷத்துக்கள் குறித்தும் விளக்கம் அளிப்பார். பிரம்ம சூத்திரத்திற்கும் விளக்கம் அளிப்பார். இவற்றைக் கேட்டு காசியில் இருக்கும் பண்டிதர்களே ஆச்சர்யப்பட்டார்கள். பலரும் ஆசார்யாரிடம் உபதேசங்களைப் பெற்றார்கள்.

வண்டுகள் மலரை நாடிவந்து மொய்ப்பது போல் சங்கரரைப் பாமரரும், பண்டிதர்களும் வந்து சூழ்ந்து அடிபணிந்து சீடர்களாக மாறி அவருக்கு தொண்டு செய்து கொண்டிருந்தார்கள்.

சங்கரர் **"சங்கராச்சாரியார்"** ஆகிவிட்டார். எப்போதும் இறைவனது திருவடிகளிலேயே அவர் ஆழ்ந்திருந்ததால் **"சங்கர பகவத் பாதர்"** எனவும் பெயர் பெற்றார்.

முதல் சிஷ்யனின் வருகை :

ஒரு நாள் தக்ஷிண தேசத்திலிருந்து வேதங்களைக் கற்ற ஒரு பிராமணன் சங்கர பகவத் பாதரை வந்து பார்த்து அவருக்கு மரியாதை செலுத்தி அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். அவன் பார்ப்பதற்கு துறவு மனப்பான்மை நிறைந்தவனாகக் காணப்பட்டான். தன் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்த அந்த பக்தரை எழுப்பி சங்கரர் "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? என்னை நாடி வர தூண்டும் உன்னுடைய நோக்கம் என்ன? வயதில் இளமையாக இருந்தாலும், ஞானத்தில் முதியவனாகத் தெரிகிறாய் என்றார்.

அதற்கு புத்திசாலியான அந்த யுவன் ஸ்வாமின்! உங்களுக்கு நமஸ்காரம் என் பெயர் **"ஸநந்தனன்".** நான் காவேரி எனும் பெரிய நதிபாயும் சோழ நாட்டைச் சேர்ந்தவன். ஆன்மீக பிரகாசம் கொண்ட மனிதர்களைச்

*சந்திக்க நாடு முழுவதும் சுற்றிவருகிறேன். சம்சார கடலில் விழுந்து கிடக்கும் எனக்கு பாதுகாப்பான கரையை அடைய எனக்கு உதவுங்கள். உங்களைத் தவிர எனக்கு அபயம் கொடுப்பவர்கள் யாரும் இல்லை. தங்களைச் சரணடைகிறேன். வேறு அடைக்கலம் நான் அறியேன்" என்று கூறினான்.*

*இதைக் கேட்ட சங்கரர் ஸநந்தனுக்கு, கோவிந்த பகவத்பாதர் தமக்கு தீக்ஷை அளித்ததுபோலவே ஸந்யாஸதீக்ஷை அருளி தன்னுடைய முதல் சிஷ்யனாக ஏற்றுக்கொண்டார். கோவிந்த பகவத் பாதர் தனக்கு உபதேசம் அளித்த முறையிலேயே ஸநந்தனுக்கு உபதேசம் அருளினார். உபநிஷத் அர்த்தத்தை பகல்வேளையிலும், ப்ரவணவத்தை இரவு வேளையிலும் உபதேசித்தார்.*

*ஸநந்தன் ஆசார்யரிடத்தில் ஸூக்ஷ்மமான கேள்விகளைக் கேட்பதில் மிகவும் சமர்த்தனாக இருந்தான். இருவரும் பிரியமாக உரையாடத் தொடங்குவார்கள். பல நாட்கள் ஸநந்தன் இரவு நேரங்களில் ஸமாதி நிலையிலேயே கழித்தான்.*

*ஸநந்தனுடைய குரு பக்தி ஆசார்யருக்கு தெரிந்திருந்தாலும் அதை உலகிற்கு காட்ட நினைத்தார் ஸ்ரீ சங்கரர். ஒரு நாள் ஒரு அதிசய நிகழ்வு நடந்தது.*

தொடரும்.....

**இரங்கல் செய்தி**

*வேதபாரதி அமைப்பின் புரவலர் கோவை* **ஸ்ரீமதி பத்மாவதி பாலகிருஷ்ணன்** (Retd., BSNL) *25.07.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரது குடும்பத்தாருக்கு வேதபாரதியின் ஆழ்ந்த அனுதாபங்கள். ஸ்ரீ பாலகிருஷ்ணன் - 9442155666*

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *8/63*

# 8. கண்ணப்ப நாயனார்

*சென்றமாத தொடர்ச்சி.*

*இறைவனுக்கு கண்ணிலிருந்து இரத்தம் நின்றதைக் கண்டு ஆனந்த கூத்தாடினான். தொடர்கிறது...*

*இறைவன் மீண்டும் சோதனை செய்தான். வலக் கண்ணில் இரத்தம் நின்றதும் இடக்கண்ணில் இரத்தம் வரத் தொடங்கியது. அதைக் கண்ட திண்ணனார் துயரம் அடையவில்லை. "கை கண்ட மருந்தை கண்டு கொண்டேன். எனக்கு இன்னும் ஓர் கண் இருக்கிறதே! அதையும் தோண்டி இடுவேன்" என்ற எண்ணினார். தன்னுடைய இரண்டாவது கண்ணையும் இழந்தால் இறைவனின் கண் இருக்கும் இடம் தெரியாது. அதை அடையாளம் காணவேண்டி இறைவனின் இடக் கண்ணில் தன்னுடைய இடது காலை ஊன்றிக்கொண்டான். பிறகு அம்பை எடுத்து தன்னுடைய கண்ணைத் தோண்டப் புகுந்தார்.*

*இறைவனுக்குப் பொறுக்கவில்லை. திருக்காளத்தியப்பன் உடனே தன் திருக்கரத்தை நீட்டி திண்ணனார் கரத்தைப் பிடித்துக்கொண்டு "நில்லு கண்ணப்பா நில்லு" என்று கூறி திண்ணனாரின் நேரில் காட்சியளித்து "கண்ணப்பா நீ எப்போதும் எனது வலது பாகத்தில் நின்றிருப்பாயாக" என்று கூறி அருள் செய்தார்.*

*கண்களைத் தியாகம் செய்ததால் திண்ணன் அன்று முதல் கண்ணப்ப நாயனாராகப் போற்றப் பட்டான்.*

*ஸ்ரீஆதி சங்கர பகவத் பாதாள் தம்முடைய*

ஸ்ரீ ஸிவானந்த லஹரியில் 63வது ஸ்லோகத்தை கண்ணப்பரின் பக்திக்காக அர்ப்பணித்துள்ளார்.

**மார்க்காவர்த்தித-பாதுகா பசுபதே-ரங்கஸ்ய கூர்ச்சாயதே**
**கண்டூஷாம்பு-நிஷேசனம் புர-ரிபோர்-திவ்யாபிஷேகாயதே/**
**கிஞ்சித்பக்ஷித-மாம்ஸசேஷ-கபலம் நவ்-யோபஹாராயதே**
**பக்தி : கிந்நகரோத்-யஹோ வநசரோ பக்தாவதம் ஸாயதே//**

(ஸ்லோகம் 63)

**பொருள் :** வழிநடந்து மிகவும் தேய்ந்த கண்ணப்பரின் செருப்பு, பசுபதியினுடைய விக்ரஹமூர்த்திக்கு அபிஷேகத்துக்கு முன் சிரஸில் வைக்கப்படும் தர்ப்பைபோல் ஆகிறது. வாயில் கொண்டுவந்த நீரால் நனைத்துக் குளிப்பாட்டுதல் புரமெரித்த பரமேஸ்வரனுக்கு தெய்வீகமான முறையான அபிஷேகம் ஆகிறது. சிறிது கடித்து ருசி பார்த்த மாம்ஸத்தின் மீதியான கவளம் அப்போதுதான் செய்த நைவேத்யமாகிறது. என்ன ஆச்சர்யமப்பா? வனத்தில் வசிக்கும் வேடன் பக்த சீலராகிறார். பக்தியானது என்னதான் செய்யாது.




நாயன்மார்கள் கதை தொடரும்......

## ஔவையார்

# "மூதுரை"

*"**மூதுரை**" = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் "**மூதுரை**" என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 11

**பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்**
**விண்டு உமி போனால் முளையாதாம் – கொண்டேபேர்**
**ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி**
**ஏற்ற கருமஞ் செயல்.**

**பொருள் :** *நமக்குப்பயன் தருவது கடைசியில் அரிசியே ஆனாலும், அது உமி இன்றி முளைப்பதில்லை. அதுபோலவே பேராற்றல் உடையவர்கள் செய்யும் செயலும் அடுத்தவர் துணையின்றி முடிவதில்லை.*

*விளக்கம் : இந்தப் பாடலை எழுதும் முன் ஔவையார் வயல்களில் நெல் விளைந்திருப்பதைப் பார்த்திருப்பார் போலும். நாம் சாப்பாட்டிற்கு அரிசியை சமைத்துத்தான் சாப்பிடுகிறோம். அந்த அரிசியை விதையாக நினைத்து விதைத்தால் அது முளைக்காது. உமியுடன் இருந்தால் மட்டுமே விளையும் சக்தியைப் பெருகின்றது. அதுபோல வல்லமை மிக்கவராக இருந்தாலும் ஒருவருக்கு ஓர் துணை இருந்தால் மட்டுமே வாழ்க்கையில் முன்னேறமுடியும். அடுத்தவர் துணை கட்டாயம் வேண்டும்.*

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## திருப்தி




சென்றமாத தொடர்ச்சி...

இத்தகைய பிரார்த்தனை-களுக்கு என்றாவது முடிவிருக்குமா? இருக்காது. பொதுவாக, மக்கள் தங்களிடம் இருப்பதைக் கொண்டு திருப்தி அடைவதில்லை. நமது முன்னோர்கள், 'ஒரு ரூபாயை வைத்திருப்பவன் நூறு ரூபாய்க்காக ஆசைப்படுவான். மற்றொருவனிடம் நூறு ரூபாய் இருந்தால், தன்னிடம் ஆயிரம் ரூபாய் இல்லையேயென அவன் கவலைப்படுவான். அப்படி ஆயிரம் ரூபாய் ஒருவனுக்குக் கிடைத்துவிட்டால், அவன் தன் இலட்சியங்களையெல்லாம் துறந்துவிட்டு இலட்ச ரூபாய்க்காக ஏங்குவான். இலட்சாதிபதியாக இருப்பவனோ அரசனாகிவிட வேண்டுமென்று திட்டங்கள் தீட்டுவான். அரசனுக்கு, எப்படியாவது செல்வத்தின் அதிதேவதையான குபேரனைப் போலாகிவிட வேண்டுமென்று தீராத ஆவல் இருக்கும். குபேரனோ, தேவர்களின் அதிபதியான இந்திரனைப்போல் இருக்க விருப்பப்படுவான். இந்திரன் பிரம்மாவின் ஸ்தானத்தை அடைந்துவிட ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பான். பிரம்மா, தான் எப்பொழுது விஷ்ணுவின் பதவியை அடைவது என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்.

தொடரும்.

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-7 சென்றமாத தொடர்ச்சி..*


அவ்வாறு பற்றில்லாதவர்களுக்குக் கர்மாவை விட்டுவிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. உலகம் சூனியத்திலிருந்து தோன்றியது என்ற கூற்று, உலகத்தின் மூலகாரணம் மிகவும் நுண்மையானது என்பதை வலியுறுத்துவதற்காக மிகைப்படச் சொல்லியதாகும். ஜீவனின் அளவைப் பற்றியும் அப்படித்தான். எனவே, இந்த விளக்கங்களெல்லாம் தெளிவுபெறுதலின் வெவ்வேறு நிலைகள் என உணரப்பட வேண்டும். விஞ்ஞானத்தில், எலக்ட்ரான், நியூக்ளியஸைச் சுற்றி வட்டமிடுகிறது என்று முதலில் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஒரு நிலைக்குப் பின்னர் மிகவும் சிக்கலான கோட்பாடாகிய நிகழ்தகவு வழி பற்றிச் சொல்லிக் கொடுக்கிறோம். இதே கற்பிக்கும் முறைதான் ஜீவனின் அளவைப்பற்றிச் சொல்லிக் கொடுக்கும் போது பின்பற்றப்படுகிறது. எனவே, வேதங்களில் எந்த விதமான முரண்பாடுகளும் இல்லை என்று அடித்துச் சொல்ல முடியும்.

முரண்பாடுகள் இல்லாமை என்கிற இந்த வியத்தகு அம்சம் விஞ்ஞானத்தில் எதிலும் காணப்படவில்லை. இயற்பியல், வேதியியல் ஏன் கணிதத்திலும் கூட முரண்பாடுகள் உள்ளன.

தொடரும்...

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## பக்தி செய்வோம்



நாம் கஷ்ட நிவிருத்திக்காக ஸ்வாமியிடம் போனாலும் சரி, அல்லது செளக்கியமாக இருக்கிறோம் என்று நன்றி காட்டப்போனாலும் சரி, அவரை நினைக்கிற பழக்கம் வலுக்க வலுக்கத் தானாகவே இந்தக் கஷ்டம் – செளக்கியம் ஆகியவற்றைப் பற்றியே நினைப்பதிலிருந்து நம் மனம் விடுபடும். அவர் எப்படி நடத்துகிறாரோ அப்படி நடத்தி வைக்கட்டும் என்ற பாரத்தை அவரிடமே தள்ளிவிட்டு விச்ராந்தியாக இருக்கிற மனோபாவம் உண்டாகும். ஏதோ ஓர் ஆனந்தமும் சாந்தமும் மனசில் படரத் தொடங்கும். இதுவே நம்மை அமர நிலையில் சேர்ப்பது. ஓயாமல் குறையுள்ள நாம் மாறாத நிறைவாக நிறைவதற்கு வழி செய்வது.


உ

ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

திருச்சி

*சிறப்பு சொற்பொழிவு :* ***தர்மத்தின் குரல்***

**நாள் : ஆகஸ்ட் 04,05,06 வெள்ளி, சனி, ஞாயிறு**

**இடம் : ஸ்ரீரங்கம், நேரம் : மாலை 6.30 மணி**

நிகழ்த்துபவர் :

**ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி**

**தொடர்பு : 94434 53053 / 94431 43697**

# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் 3ம் ஆண்டு ஆராதனை விழா


Swamigal Adhishtana @ Siddapur

*சென்னை, மந்தைவெளி – அபிராமபுரம் ஶ்ரீ சங்கர குரு குலத்தில்*
**14.07.2023 வெள்ளிக்கிழமை**
வேதோக்தமாக நடைபெற்றது.

*காலை 8.30 மணிக்கு வேத வகுப்பில் பயிலும் வித்யார்த்திகள் சுமார் 30 பேர் கலந்து கொண்டு மூன்று வேதங்களையும் பாராயணம் செய்தார்கள்.*

*மயிலாப்பூர் மஹா மஹோபாத்யாய ஶ்ரீமணி ட்ரவிட் சாஸ்திரிகள் குரு மஹிமை குறித்து உபன்யாசம் செய்தார்கள்.*

*மயிலாப்பூர் மஹா மஹோபாத்யாய ஶ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், சுவாமிகள் குறித்து ஜூலை 2023 வேதபாரதி இதழில் வெளிவந்த குறிப்புகளையும், சுவாமிஜியின் கீர்த்திகள் குறித்தும் பேசினார்கள்.*

*மாதுஶ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் சுவாமிஜியின் எளிமை குறித்து உரையாற்றினார். தொடர்ந்து ஷோடசோ உபசார பூஜைகள் செய்து, ஸ்வாமிகளுக்கு புஷ்பாஞ்சலி செய்தார்கள்.*

*இடம் கொடுத்து உதவி செய்த ஶ்ரீசந்திரசேகர் மாமா, வேதபாரதி தன்னார்வ உறுப்பினர்கள், ஸ்வாமிகளின் மீது அளவற்றமரியாதை உள்ள நம் உறுப்பினர்கள் அனைவரும் நலமுடன் வாழ வேதபாரதி சார்பாக ப்ரார்த்திக்கிறோம்.*

*ஆசிரியர்.*

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.



- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

**48625585 / 9840545585**



PENMAIYAI POTRUVOM ON 16.07.2023 @ CHENNAI



UNJAL SEVAI ON 23.07.2023 @ RAJALAKSHMI MANDAPAM



AVVAI VIZHA ON 30.07.2023 @ SANKARA SCHOOL, EAST TAMBARAM



**UNJAL SEVAI ON 24.07.2023 @ VEDESHRENI HALL**




Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
WOPPER

# அறிவோம் ஆழ்மனதின் அளப்பறியா ஆற்றல்

**திருச்சி கணேசன்**

*சென்ற மாத தொடர்ச்சி...*

இன்று வாழ்வில் வெற்றி பெற்று பல சாதனைகள் புரிந்தவர்கள், தங்கள் வெற்றிகளை அடைவதற்கு இவை அனைத்தையும் தங்கள் மனதில் முதலில் ஒத்திகை பார்த்த பின்னர்தான் அதைப்பற்றி பலமுறை சிந்தித்து அதே நினைவாகவே வெற்றியடையும் வரை இருந்து அந்த வெற்றிகளைப் பெறுகின்றனர். அதுபோல் நாம் எதையுமே குறைவாக மதிப்பிடக் கூடாது. உதாரணமாக ஒரு மாணவி அல்லது மாணவன் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுக்க வேண்டுமானால் மனதில் 500க்கு 495 அல்லது 1200க்கு 1190 எடுக்க வேண்டுமென்று உறுதியாக நினைத்து அன்று முதல் முறையாகத் திட்டமிட்டு முழுமுயற்சி செய்து உழைத்துப் படிக்க வேண்டும். பெரிய கோடீஸ்வரன் ஆவேன் என்று எண்ண வேண்டுமே அன்றி இலட்சாதிபதி ஆவேன் என்று எண்ணக்கூடாது. எண்ணங்களை உயர்ந்த நோக்குடனும் உயர்ந்த இலக்கை நோக்கியும் நிர்ணயம் செய்து அதற்கேற்ப திட்டமிட்டு செயல்பட வேண்டும். முடிவில் நாம் நிர்ணயித்த இலக்கை முழுவதுமாக எட்ட முடியாவிடினும், நாம் அடைந்த நிலை சற்றே தாழ்ந்த நிலையானாலும் கூட நிச்சயம் வெற்றியே.

கருத்தேற்றம் - சுய கருத்தேற்றம் :

நம்முடைய எண்ணத்தை, நமது கனவை நம் ஆசைகளை பிறர் மீது ஏற்றுவது கருத்தேற்றம். ஒரு தாயோ தந்தையோ தன் மகன் சிறந்த டாக்டராக வரவேண்டும் என்று கூறுவது கருத்தேற்றம். தாய் தொடர்ந்து இவ்வாறு கூறுவதைக் கேட்ட மகனோ /

மகளோ தான் ஒரு தலை சிறந்த டாக்டராக வேண்டுமென்று எண்ணி அதே சிந்தையைனயுடனும் கனவுடனும் மனதில் நினைந்து அதற்கு செயல் வடிவம் கொடுத்து அந்தக் கனவை நினைவாக்கப் பாடுபடுதலை சுயகருத்தேற்றம் அல்லது நமக்கு நாமே தீட்டும் திட்டம் எனலாம். இம்முறையைப் பின்பற்றி செயல்படுத்துவது மிகச்சுலபம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யார் வேண்டுமானாலும் இம்முறையைப் பின்பற்றி வெற்றி பெற இயலும். இதை முறையாகச் செய்வது எப்படி என்று பார்ப்போம்.

1. முதலில் நமது முதன்மை தேவை என்ன என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மூன்று படுக்கை அறைகள் கொண்ட நல்ல காற்றோட்டமான வீடு வாங்குவது.

2. நல்ல குளிர்சாதனம் பொருத்தப்பட்ட நான்கு சக்கர வாகனம் வாங்குவது அல்லது

3. சிறந்த டாக்டராகவோ இஞ்சினியராகவோ ஆவது.

இதுபோன்ற ஏதாவது ஒரு சிறந்த குறிக்கோளை மனதில் கொள்ளவேண்டும். தினமும் படுக்கச் செல்லும் முன் விளக்கை அணைத்துவிட்டு படுக்கையில் இயல்பாக தளர்வாக அமர்ந்து கொண்டு 30 அல்லது 40 நொடிகளுக்கு நமது உள்மூச்சு அல்லது வெளிமூச்சு சுவாசத்தைக் கவனித்தால் நமது மனம் ஓரளவு ஒருநிலைப்படும். இந்த நிலையில், நமது ஆழ்மனமானது நாம் விரும்பும் சுயகருத்தேற்றம் அல்லது கட்டளையை சுலபமாக ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கும். அப்போது நாம் கீழ்கண்டவாறு 25 அல்லது 30 முறை முழு நம்பிக்கையோடு ஒரே சிந்தனையுடன் முனைப்பாக நம் காதில் விழும்படி ஓரளவு சத்தமாகக் கூற வேண்டும்.

தொடரும்...

## "ஆசான்"

**மதுரை முரளி**

*சென்றமாத தொடர்ச்சி...*

*இன்னைக்கு இரவு நீங்க விருப்பப்பட்டா... தங்கலாம்".*

*"ஓ.. மிக்க நன்றி வணக்கம்" தெரிவித்த பிரகாஷ்,*

*"அகிலன்.. நான் படிச்ச வகுப்பை பார்க்கணும். உங்கள் அனுமதியோட"*

*"நிச்சயமா, இப்படி வாங்க" என அழைக்க,*

*சற்று நெகிழ்ச்சியுடன் பள்ளிக்கூட அறைக்குள் நுழைந்தவன்,*

*"இ.. இதுதான் என்னோட வகுப்பு. ஐந்தாம் வகுப்பு. ஆனா, அப்பெவெல்லாம் மர பெஞ்சுகள். இப்போ இரும்பு பெஞ்ச். "என்று சொன்ன பிரகாஷ், பெஞ்ச்சொன்றில் அமர்ந்து வகுப்பறையின் நிலையை பார்வையிட்டான்.*

*வகுப்பறை பெரிதாய் மாறி இருக்கவில்லை. புதிதாய் வேயப்பட்ட ஓடுகள். அங்கும், இங்கும் சிறிய இடைவெளி அதன் வழியே சூரிய ஒளிக்கீற்றுகள். கரும்பலகை, புதியதாய். கூடவே "டஸ்டர்" துணி. பலகை ஸ்டாண்டில் ஓரம் சாக்பீஸ் டப்பா. உள்ளே முழுதாய் இரண்டு சாக்பீஸ். சில உடைந்த துண்டுகள் நான்கைந்து வண்ணங்களில். தான் படித்த "கரும்பலகை" கவிதை மனதில் நினைவுக்கு வர,*

*"அகிலன் சார், இப்படி உட்காருங்க. அட, இது உங்க பள்ளி. நீங்களே நின்னா எப்படி? சமீபத்தில் நான் "கரும்பலகை" கவிதை படிச்சேன்.." அவர் கைப்பிடித்து அருகில் அமரவைத்து கண்களில் ஒற்றிக் கொண்டான்.*

*"அடடா! என்ன சார் நீங்க? என் கையை தொட்டு.." அவசரமாய் கையை உதறிய அகிலன், "ஏதோ கரும்பலகை கவிதைன்னு சொன்னீங்க? "என*

நினைவுபடுத்த "ஹ.. இதோ" பையிலிருந்த கவிதை தொகுப்பை எடுத்த பிரகாஷ்.. வாசித்தான்.

**"கரும்பலகை" – கவிதை**

அன்று முதன் முதலாய்
எழுத்துக்கண்ணை திறந்த... பலகை.
பறந்த.. சுண்ணாம்பு துகள்களுக்கிடையே..
குரு சிஷ்யன் உறவை உலகிற்கு
அறிவித்த அறிவிப்பு பலகை
மாதா பிதா குரு தெய்வம்
மாண்பை மனதில் நிறுத்திய பலகை
மகிழ்ச்சியை என்றும் மனதில் செதுக்கிய பலகை
இன்று.. காலமாற்றத்தில் காணாமல் போய்
தன் உன்னதத்தை தொலைத்து விட்டது
நம்மிடையே வாழ்வோம்
கரும்பலகை போதித்த போதனைப்படி
என்றும்"

வேக, வேகமாய் வாசித்து விட்டு, அதனை விட வேகமாய் சுவாசிக்கவும் செய்தான் பிரகாஷ்.

"அருமை சார்'' கைதட்டி பாராட்டினார் தலைமை ஆசிரியர் அகிலன்.

"நன்றி சார். இந்த கவிதை தான் என்னை இங்கே கூட்டி வந்தது. என் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தை என் கண்முன்னே காட்டி.. ஒரு கலகலப்பை கொண்டு வந்திருக்கு எனக்கு'' மகிழ்ச்சியாய் பிரகாஷ் கூற,

"ஆச்சரியம் சார். பெரிய பதவியில் இருந்தும், பழசை மறக்காமல் உங்கள மாதிரி சிலபேர்தான் உள்ளூரை மறக்காம இருக்கீங்க!''

"போன வாரம் வரை, நானும் மறந்துதான் இருந்தேன்.

தொடரும்....

# வேதபாரதி - திருநெல்வேலி மஹாருத்ரம் - கோடி காயத்ரீ ஹோமம் - 2023

*சென்றமாத தொடர்ச்சி...*

*ஹோமத்தில் பங்குகொள்ள விரும்பும் அனைவரும் தினமும் சந்த்யாவந்தனம் செய்யவும் அதன் அங்கமாகச் செய்யப்படும் காயத்ரிஜபம் தவிர அதிகதிகமாகத் தங்களால் இயன்ற அளவு கூடுதல் ஜபம் செய்யவும் வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு ஜபம் செய்யும் அங்கத்தினர்களை ஊக்குவிக்கும் முகமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஆஸ்திக சமாஜத்தில் ஒன்று கூடி காயத்ரி ஜபம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டின்படி 14.05.2023 முதல் 18.06.2023 முடிய ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஆஸ்திக சமாஜத்தில் நம் அங்கத்தினர்கள் ஆறு வாரங்கள் ஒன்று கூடி காயத்ரி ஜபம் செய்தனர்.*

*முதற்கட்டமாக ஊரப்பாக்கம் ஸ்ரீ சங்கரநாராயணன் அவர்கள் நெல்லை வந்திருந்த போது நம் நண்பர்களோடு ஸ்ரீ அழியாபதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று எங்கெங்கு ருத்ர பாராயணம் மற்றும் ஹோம குண்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று பார்வையிட்டு ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்களுக்குப் பூர்வாங்கமாக ஒரு கருத்துரை தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் ஸ்ரீ வெங்கட்ராமன் மற்றும் ஸ்ரீ ரகுநாதன் அவர்களும் 11.06.2023 அன்று நெல்லைக்கு வந்திருந்து திருக்கோவிலுக்கு விஜயம் செய்து அண்ணாமலையார் திருப்பணிக் குழுவினருடன் கலந்தாலோசித்து அனைத்து ஏற்பாடுகளையும் முடிவு செய்தனர். அவர்கள் ஆஸ்தீக சமாஜத்திற்கும் விஜயம் செய்து அங்கு காயத்ரி ஜபம் செய்யப்படும் பாங்கினையும்*

பார்வையிட்டனர்.

அதன்பின்னர் நெல்லையில் முழுவீச்சில் அங்கத்தினர்களை ஜபம் செய்ய அழைக்கும் பணி நடைபெற்றது. ஒவ்வொரு அங்கத்தினர்களையும் அவர்களுக்குத் தெரிந்த ஒரு நபரையாவது ஜெபத்திற்கு அழைத்துவரக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஸ்ரீ மணிகண்டன் அவர்களது முயற்சியால் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கோல்டன் ஜூபிலி பள்ளி தாளாளர் ஸ்ரீமதி உஷாராமன் அவர்கள் மூலமாக பத்து பிரும்மச்சாரி குழந்தைகளும் ஹோமத்தில் பங்கு கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. பள்ளியின் தாளாளர் நமக்கு இரண்டு வேன்கள் தந்து நம் அங்கத்தினர்கள் ஜெபத்தில் பங்குகொள்ள போக்குவரத்திற்கு உதவி செய்தமை இன்றியமையாததாகும். ருத்ரம் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ நடராஜன் மற்றும் நண்பர்கள் ஸ்ரீ பாலசுப்பிரமணியன், ஸ்ரீ மணிகண்டன், ஸ்ரீ மணி வாத்யார், ஸ்ரீ அனந்தசுப்பிரமணியன் ஆகியோரது முயற்சியும் உழைப்பும் மிகவும் பாராட்டுதற்குரியது.

22.06.2023 அன்றே ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்கள் தங்களது குழுவினரோடு வந்திருந்து அனைவரையும் வழி நடத்தினார்கள். சென்னையில் இருந்து 45 அங்கத்தினர்கள் மஹா ருத்ர பாராயணத்திலும் ஸ்ரீ மஹாமேரு மண்டலியில் இருந்து நூறு சுமங்கலிகள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணத்திலும் கலந்து கொள்ள வந்திருந்தனர். அவர்கள் அனைவரும் தங்குவதற்கு மண்டபங்கள் தேர்வு செய்யப்பட்டு அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

தொடரும்....

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

உ

# திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



**பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை**
**வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.**

Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS

BK MATRIMONY
An Auspicious Beginning ...

**தேதியூர். V.J. ராமன்**

ஆத்மார்த்த ஜோதிடர்

**9003195599**
**9445230940**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 3 பகுதி - 32

*இன்றைய பெற்றோர்களில் பணிக்குச் செல்லாதவர்கள் மிக, மிகக் குறைவானவர்கள். ஒரு நிறுவனம் அல்லது ஒரு அரசாங்க சூழல் எவ்விதத்தில் செயல்படுகின்றது என்று நன்கறிந்து அந்த நிறுவனம் அல்லது சூழலுடன் ஒத்துப்போனால் தான் பணி என்று நன்கு புரிந்தவர்கள் நீங்கள்.*

*அன்று கல்விக்கூடமாக இருந்தவை இன்று கல்வி நிறுவனமாக உள்ளது என்று நாம் அனைவரும் அறிவோம்.*

*அன்று மரத்தடியில் படிப்பதில் பெருமை. மகிழ்ச்சி இன்று தம் குழந்தைகளுக்கு அறைகள், ஃபேன்கள் வசதி அல்லது ஏ.சி. வசதி, பள்ளிக்குச் சென்றுவர பஸ்வசதி என்று பெற்றோர்களே எதிர்பார்க்கின்றார்கள் என்பதால் கூடங்கள் நிறுவனங்களாகி விட்டன.*

*அத்தகைய நிறுவனச் சூழ்நிலையில் தான் இன்றைய ஆசிரியப் பெருமக்கள் பணிபுரிகின்றனர். உங்களுக்கு ஏற்படும் அனைத்துப் பிரச்சனைகளும் அவர்களுக்கும் உண்டு என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

*மற்ற ஏனைய நிறுவன ஊழியர்களுக்கும், இன்றைய ஆசிரியர்களுக்கும் உள்ள வித்யாசம் என்பது நிறுவனத்திற்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் இடையிலிருப்பது தயாரிக்கும் பொருட்களல்ல, உயிருள்ள உணர்வுகள் நிறைந்த குழந்தைகள்.*

*நிறுவனங்களில் பணி புரியும் உங்களிடம் இருக்க*

வேண்டிய அனைத்து 'Soft Skills' அவர்களுக்கும் தேவை, அதேசமயம் இது ஏதுமறியாத மாணவ மணிகளிடம் ஆசிரிய கம்பீரத்துடன் இருக்க வேண்டும் எனும் பொறுப்பு அவர்களுக்குள்ளது.

நிறுவனத்திற்கும் ஒத்துழைப்பு தந்து, உங்களுக்கும் ஒத்துழைப்பு தந்து குழந்தைகளைக் கையாளுவது சாதாரண விஷயமல்ல.

இத்தகைய ஆசிரியர்களிடம் நீங்கள் காட்ட வேண்டியது மரியாதை. பணிவு, அன்பு உங்களை சதா கண்காணித்துக் கொண்டேயிருக்கும் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் கற்றுக் கொடுப்பதை விட, நடந்து காட்டுவதில் தானே உள்ளது சூட்சுமம்.

ஒரு மாணவன் அல்லது மாணவி தன் ஆசிரியரை எப்படிப் பார்க்கின்றார்கள், எவ்விதத்தில் உணருகின்றார்கள் என்பது 40 நிமிடங்களில் கற்பிக்கப்படும் அன்றையப் பாடத்தினுடனேயே இணைந்துள்ளது.

“உன் ஆசிரியர் உன்னை எப்படிப் பார்க்கிறார் என்பது முக்கியமல்ல. நீ நன்றியும், பணிவும், அன்பும் கொண்ட பார்வையோடு உன் ஆசிரியரை பார்க்க வேண்டும். அதுதான் முக்கியம்” என்று முளையிலேயே விதைக்க வேண்டும்.

“நீ பார்க்கும் பார்வையிலும், நடந்து கொள்ளும் முறையிலும் தான் உன் ஆசிரியரின் ஆசீர்வாதம் கிடைக்கும்” என்று மீண்டும், மீண்டும் கூறுங்கள்.

**“உதவிவரைத் தன்று உதவி, உதவி**
**செய்யப்பட்டார் சால்பின் வரைத்து”**

**(குறள் 105, அதிகாரம் 11)**

“உதவியின் மதிப்பு அளவைப் பொறுத்ததல்ல. உதவியை பெற்றுக் கொண்டவனின் சிறந்த குணத்தைப் பொறுத்து அளவு விரியும்” என்கிறார் வள்ளுவர் பெருமான்.

தொடரும்...

*ஸ்ரீ குருப்யோ நம : ஓம் நமோ வேங்கடேஸாய நம :*

## ஸ்ரீ ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் ஊஞ்சல் உத்ஸவம் 24.07.2023

*திருமலை திருப்பதி தேவஸ்தானமும், தாம்ப்ராஸ் வேளச்சேரி மேற்கு கிளையும் இணைந்து நடத்திய ஸ்ரீ ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸ பெருமாள் ஊஞ்சல் உத்ஸவத்தில், 24.07.2023, வேதஸ்ரேணி ஹால், ராம்நகர் 3வது தெரு, வேளச்சேரியில் காலை 7.20 முதல் தொடங்கிய உத்ஸவ ஸேவையில் பெருமாளுக்கு அதிப்ரீதியான அன்னமாச்சார்யர் பாடல்களை பாடும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. எங்களது “ஸ்ரோதஸ்வினி” குழுவின் பூர்வ ஜன்ம ஸுஹ்ருதம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.*

*எங்களது குழு 2009-ல் எங்கள் மதிப்பிற்குரிய குரு திரு. உபேந்த்ர குப்தா அவர்களால் “ஸ்ரோதஸ்வினி” என பெயர் சூட்டப்பட்டு வேளச்சேரியில் துவக்கப்பட்டது. எங்களது குரு அன்னமய்யா க்ருதிகளை பக்தி பூர்வமாக பரவச்செய்வதையே தன் வாழ்நாளின் நோக்கமாக கொண்டிருந்தார். 25 வருடங்களுக்கு முன்பு “ஸுஷ்ருதி” எனும் அமைப்பின் மூலம் சென்னையின் பல்வேறு பகுதிகளில் 8 குழுக்களைத் துவக்கினார். ஒவ்வொரு வருடமும் வைகுண்ட ஏகாதஸியை முன்னிட்டு ஜனவரி முதல் ஞாயிறு “அன்னமய்ய அகண்டம்” என்னும் அருமையான நிகழ்ச்சியை துவக்கிவைத்தார். இன்றும் எங்கள் குருவருளால் எங்களது “ஸுஷ்ருதி” அமைப்பினால் காலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரை பல்வேறு கலைஞர்கள் பங்குபெற“அன்னமய்யா அகண்டம்” வெகுவிமரிசையாக நடைபெற்று வருகிறது.*

*27 அங்கத்தினர்களைக் கொண்ட எங்களது ஸ்ரோதஸ்வினி இசைக்குழுவின் மூலம் அன்னமாச்சார்யர், புரந்தரதாஸர் மேலும் தமிழ் பாடல்கள், பஜனை பாடல்கள் அடங்கிய பக்தி பாடல் நிகழ்ச்சிகளை இதுவரை 800க்கும் மேற்பட்ட பல்வேறு*

கோயில்களிலும், சுபநிகழ்ச்சிகளிலும் வழங்கியுள்ளோம். எங்களுக்கு பக்க வாத்தியமாக வயலின் / ஹார்மோனியம், டோல்கி / மிருதங்கம் வாசிக்க அருமையான கலைஞர்கள் அமைந்தது எங்கள் பாக்கியம். குருவின் பரிபூர்ண ஆசியுடனும் பகவத் க்ருபையுடனும் நடந்து வரும் எங்களது பக்திப் பாடல்கள் கைங்கர்யம் இன்னும் மேன்மேலும் பக்த கோடிகள் அனைவரின் நல்லாதரவு கிடைத்து செழிக்க எல்லாம் வல்ல அந்த பரம்பொருளை வேண்டிப் பணிகிறோம்.

*ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து//*

*பெரியவா சரணம்.*

*மேலும் தொடர்புக்கு :*

**ஸ்ரோதஸ்வினி, ஶ்ரீமதி பத்மினி கிருஷ்ணன்**

**98410 46897**

வேதபாரதி ஸ்லோக வகுப்புகள் நடத்தும் ஆசிரிய பெருமக்கள் ஶ்ரீமான் முரளி, ஶ்ரீமதி நீலா முரளி அவர்களிடம் பயிலும் இளம் மொட்டுக்கள் தங்கள் வீடுகளில் ஸ்வாமிக்கு அலங்காரம் செய்த விசர்ஜன பூக்களைக்கொண்டு உரமாக்கி, சாம்பிராணி கலந்து மனமுள்ள தூப் செய்துள்ளார்கள். தங்கள் வீடுகளில் இறைவனுக்கு நறுமணம் சமர்ப்பணம் செய்கிறார்கள். குழந்தைகளுக்கும் மாமிக்கும் வேதபாரதியின் அன்பான பாராட்டுக்கள்.




## சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## தாடகை என்றொரு சிவபக்தை



*சென்றஇதழில் நாம் பார்த்த, படித்த சிவபக்தை தாடகை பற்றி வெவ்வேறு விதமான ஆராய்ச்சிகள் இருப்பதை நான் அறிய முடிந்தது. அவள் ஸ்ரீ ராமாயணத்தில் வரும் தாடகைதான் என்று சிலரும், இவள் வேறு, அவள் வேறு என்று சிலரும் கருத்துக் கூறுகிறார்கள். நாம் அந்த சர்ச்சைக்குள் போக வேண்டாம். நமக்குத் தெரிய வேண்டியது சிவபக்தை தாடகை எனும் பெண்ணின் ஆழ்ந்த பக்திக்காக தன்னையே சிரம் தாழ்த்திக் கொண்ட சிவபெருமானின் கருணை பற்றி மட்டுமே தெரிந்து கொள்வதே போதும் அல்லவா? (மும்பை ராமகிருஷ்ணன் எனும் அன்பர் ஓய்வுபெற்ற பொறியாளர் என்றாலும் பல்வேறு பக்தி ரச புத்தகங்களின் ஆசிரியர். நூற்றுக் கணககான பக்திக் கட்டுரைகளை ஆன்மீகப் பத்திரிகைகளில் எழுதியுள்ள கட்டுரையாளர் என்றவிவரங்களையும் தாண்டி, நம்மை வியக்க வைக்கும் விஷயம் என்னவென்றால் 52 வருடங்களுக்கும் மேலாக, சம்பிரதாய பஜனைகளை பாரத தேசமெங்கும மட்டுமல்லாது அயல்நாடுகளிலும் செய்து வரும் பாகவத் சிரோன்மணி என்பதுதான். அவர் எழுதியுள்ள "பக்தை ரத்னங்கள்'' என்ற புத்தகத்தில் சிவபக்தை தாடகை பற்றிய கட்டுரை ஒன்று உள்ளது. நன்றிகளுடன் அதனிலிருந்தும் சில விவரங்களை இணைத்துள்ளேன்)*

திருப்பனந்தாள் ஸ்தலத்தில் குடிகொண்டுள்ள

"தாடகேஸ்வரர்" "அருணஜடேஸ்வரர்" ஆலயத்தின் கர்ப்பக்ருஹத்தை மாலையில் திறந்த அர்ச்சகர் அதிர்ந்து நின்றார். சிவலிங்கத்தின் மேல்பகுதி ஒருபுறம் சாய்ந்திருப்பதைக் கண்டு எதுவும் புரியாமல் சிறிது நேரம் நின்றுவிட்டுத் தானே அதனை நிமிர்த்தும் முயற்சியில் ஈடுபட்டார் முடியவில்லை. ஒரு சிலரை அழைத்துவந்து கயிற்றைக் கட்டி நிமிர்த்தி வைக்க முயற்சித்தார். பலனில்லை. அனைவரும் "என்னமோ ஏதோ" என்று பயத்துடன் விலகி நின்றனர். அர்ச்சகரும், தன்னால் ஏதும் தவறு நிகழ்ந்துவிட்டதோ என்று அச்சப்பட்டுப் போனார். இதற்குமேல் சும்மா இருப்பது சரியில்லை என்று அரசரின் செவிக்கு இந்தச் செய்தி கொண்டு செல்லப்பட்டது. அரசனும் தன்னால் ஆன முயற்சிகளைச் செய்துபார்க்க நினைத்து, குதிரைகள், யானைகள் என்று அனைத்து சக்திகளையும் பயன்படுத்தி சிவலிங்கத்தை நிமிர்ந்த முயற்சித்தான். எதுவும் பலனளிக்கவில்லை. இறுதியில் சிவபெருமானிடமே, "ஏன் இப்படி நடந்தது? நாங்கள் என்ன குற்றம் செய்திருந்தாலும் மன்னித்து அருளும்படி வேண்டிநின்றார்கள். எப்படி சரிசெய்வது? அல்லது இப்படியே இருப்பதற்கு விட்டுவிடுவதா? என்று தாங்களே எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று சிவபெருமானைக் கேட்டுக் கொண்டார்கள்.

அரசனின் கனவில் சிவபெருமான் தோன்றினார். யாரும் கவலை கொள்ள வேண்டாம். தாம் தாடகை எனும் சிவபக்தையின் பக்திக்கு மனமிரங்கி, அவள் அணிவிக்க வந்த மலர் மாலையை ஏற்றுக் கொள்ளவே சிரம் தாழ்த்திக் கொண்டோம். அத்தகைய பக்தி மிக்க ஒருவரால்தான் இனி நாம் நம் இயல்பு நிலையை அடைய முடியும்" என்று தெரியப்படுத்தி மறைந்தார்.

தொடரும்..

## இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

*பரதனைப் போன்ற மகனைப் பெற்ற கைகேயி பாக்கியசாலி. அவனை அரச குமாரனாகப் பெற்ற அரச குடும்பத்தினர் பாக்கியசாலிகள். அதனால் தான் கம்பர் தனக்கே உரிய கவி நயத்துடன் “ஆயிரம் இராமர் சேர்ந்தாலும் ஒரு பரதனுக்கு ஈடாகாது” என்கிறார். இதனால் தான் பரதனை பரதாழ்வார் என்று எல்லோரும் கொண்டாடுகிறார்கள். நாம் மேன்மை அடைய பரதனின் இந்தக் கதைப்பகுதியைப் படித்தாலே போதும். பரதன் சித்திர கூடத்திற்கு வரும் பகுதி ஒன்றே போதும் நம்மை உய்விக்க.*

*ஒவ்வொரு பாரத மைந்தனின் மனதிலும் பக்தியும், ஞானமும் பிறப்பிலேயே அடைந்திருக்கிறோம். மக்கள் மக்களாக இருக்கக்காரணம் இராமாயண மகா காவியமே. தலைமுறைதலைமுறையாக நமக்கு வழிகாட்டியாக இருப்பது இந்தக் காவியம், அதில் வரும் பாத்திரங்கள்.*

*நால்வகைப் படைகளுடன் பரதன், சத்ருக்கனன், மந்திரிகள், வசிஷ்டர், மூன்று தாய்மார்கள், நகர மக்கள் புடைசூழ இராமர் இருக்கும் வனத்திற்குக் கிளம்பினார்கள். போகும் வழியில் குகன், பரத்வாஜ் மகரிஷி மூலம் சித்ர கூடத்தில் இராமன் இருக்கிறார் என்பதை தெரிந்து கொண்டான் பரதன்.*

*மந்தாகினி நதிக்கரையில் உள்ள சித்ர கூடம் இயற்கை எழில் கொஞ்சும் பகுதி. அப்பகுதியில் பர்ணசாலை அமைத்து மூவரும் (இராமன், இலக்குவன், சீதை) வசித்து வந்தனர். அங்கு ஒரு மலைச்சாரலில் நிம்மதியாக இருந்து வந்தனர். அப்போது வெகு தொலைவில் பெருத்த சப்தமும், பெரிய*

தூசிப்படலமும் வானை முட்டும் வரையில் எழுந்திருந்தது. உடனே இலக்குவன் ஒரு மரம் மீது ஏறி வந்து என்ன என்று பார்த்தான். அயோத்தி நகரக் கொடியுடன் பெரும் திரளாக மக்கள் கூட்டம் வருவதைப் பார்த்தான். பார்த்து வெகுண்டான். கடும் கோபத்துடன் மரத்திலிருந்து இறங்கினான். பிறகு இராமர் இருக்கும் இடம் வந்து, பரதன் அதர்ம முறையில் இராஜ்யத்தை அடைந்ததோடு மட்டுமல்லாமல் நம்மைக் கொல்லவும் வருகிறான் என்றான் இலக்குவன். இனி அவனது தாயின் எண்ணம் ஈடேறாது. இன்று அவனை ஒரு கை பார்த்து விட வேண்டும் என படபடவென்று பொரிந்தான்.

அப்போது இராமர் தந்தையின் கட்டளையைப் புறக்கணித்து தம்பி பரதனை கொன்று அடையும் ராஜ்யத்தினால் என்ன லாபம் நமக்கு. அதனால் என்ன பெருமை எனக்கு. ராஜ்ய ஆசை கிடையாது. நீங்கள், மூன்று சகோதரர்கள் இல்லாமல் என்னால் உலகில் ஒரு துளிகூட இன்பம் அனுபவிக்க முடியாது. பரதன் உள்ளத்தை நான் அறிவேன். அவன் தர்மத்திற்கு விரோதமாக எதுவும் செய்ய மாட்டான். என்னை சமாதானப்படுத்தி மீண்டும் அயோத்திக்கு அழைத்துச் செல்ல வருகிறான். பரதன் பற்றி நீ பேசியது தவறு. இராமரின் இந்தப்புரிதல் நம்மை பிரமிக்க வைக்கின்றது. மேலும் அந்த சகோதரர்களுக்கிடையே உள்ள பாசப்பிணைப்பு நமக்கு புரிகின்றது.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

# THEMADRASSANSKRITCOLLEGE&SSVPATASALA

[AidedbyCentralSanskritUniversity,MinistryofEducation,Govt.ofIndia,N.DelhiunderAdarshSanskritMahavidyalayaScheme]
ASanskritInstitutionunderSriV.KrishnaswamiIyerSanskritEducationTrust
AffiliatedtotheUniversityofMadras
84,Thiru.Vi.Ka.Salai,(RoyapettahHighRoad),Mylapore,Chennai-600004.Phone:044-24980421
E-mail:mds.sanskritcollege@gmail.com::Website:www.madrassanskritcollege.edu.in

## CENTRE FOR SANSKRIT & SASTRA STUDIES

### REGULAR (FULL TIME) COURSES

**PrakS iromani( FoundationC ourse):** APassinXStd.orequivalent-Age:15yrs.Duration:2years.

**SiromaniM adhyama-B .A.:** +2withSanskrit/PassinPraksiromani - Age:1 7yrs.Duration: 3years.

**SanskritS iromani-M .A.:** SiromaniMadhyama-B.A./Acharya - Age:20yrs.Duration:2years.

**SanskritM .A.:** UGwithSanskrit/DiplomainSanskritwithanydegree - Age:20yrs.Duration:2years.

**M.Phil.&P h.D.,in S anskrit:** SelectionasperUniversityofMadrasnorms.

### PARTTIMECOURSES-WEEKENDCLASSES

**Certificate&D iplomaC oursei nS anskrit:** APassinX IIStd.&above.Nopriorknowledgeof SanskritrequiredforCertificateCourse.Age:18yrs&above.Duration:July/AugusttoApril

## COURSES UNDER "SANSKRIT FOR ALL" SCHEME (WEEKLY CLASSES)
**Certificates are issued by the Madras Sanskrit College**

| | |
|---|---|
| **BHAGAVATAPARAYANAM:** Weekly twice. All Tuesdays & Fridays - 4.30 - 5.30 p.m. 12 yrs. & above | **Continuous Course Admission atanytime** |
| **RAMAYANAPARAYANAM:** Weekly twice. All Mondays & Thursdays - 4.30 - 5.30 p.m. 12 yrs. & above | |

**ARAMBAJOTIDAM:** Weekly twice. All Thursdays & Fridays - 4.30 - 5.30 p.m. 12 yrs. & above

**ONLINE COURSES : Visit : www.m adrassanskritcollege.com**

**Pravesika, Dakshata, Yoga Praveshika, Laghu Siddhanta Kaumudi & Panchangam Courses**
**Coaching material for Prak Siromani (Foundation Course) & Siromani Madhyama courses**

**Forfurtherdetails,Contact: 044-24980421;8072149653**

# தருவின் நிழலில்
# கருவேல் மரம் / கருவ மரம்
## (ACACIA NILOTICA)

*சென்றமாத தொடர்ச்சி...*

*தினமொரு புது குச்சியினால் பல்துலக்கி சுகாதாரமான முறையை பின்பற்றி வந்தார்கள் நம் முன்னோர்கள். தற்போது பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரங்களினால் பற்பசை ஒரே தூரிகை பல நாட்களுக்கு என பண விரயத்தோடு வியாதிகளையும் வரவேற்கிறோம்.*

*இதன் இலைகளை அரைத்து வெட்டு காயத்திற்கு போட விரைவில் காயம் ஆறிவரும். தண்ணீரில் கொதிக்கவைத்து வடிகட்டிய நீரை வாயிலிட்டு கொப்புளிக்க ஈறுகள் இறுக்கமடையும், தொண்டை கரகரப்பு நீங்கும். கொழுந்து இலைகளை தயிர்விட்டு அரைத்து உட்கொண்டால் உணவிலுள்ள (வயிற்றுக்குள் உள்ள) விஷத்தன்மையை* (Food poison) *முற்றிலும் நீக்கிவிடும்.*

*கருவேல மரத்தின் பட்டைகள், துணிகளுக்கு சாயம் ஏற்றவும், சோப்பிற்கு பதிலாக சலவை செய்யவும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பேப்பர் கூழ் தயாரிக்கவும் பயன்படுகிறது.*

*இதன் பட்டைகள், மருத்துவ ரீதியாக சீதபேதி, நீரிழிவு, காய்ச்சல், அழல்நோய் போன்றவற்றை போக்குவதற்கும் பயன்படுகிறது. கடும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் கருவேலன் பட்டையுடன், எள்ளை சேர்த்து இடித்து மக்கள் உணவாக உட்கொண்டதாக "வாட்" என்ற நூலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.*

*இம்மரத்தின் பிசின் மிக முக்கியப் பொருளாகும். இதனை* (Gum Arabic) *என்கிறார்கள். ஒரு மரத்திலிருந்து ஆண்டொன்றிற்கு கிட்டத்தட்ட 1 கிலோ வரை பிசின் சேகரிக்கலாம். "டானின்" நிறைந்திருக்கும் இதன் பிசின்*

மிட்டாய், பேப்பர், தீப்பெட்டி செய்வதற்கும், காகிதங்கள் ஒட்டுவதற்கு பசையாகவும், மை தயாரிப்பிலும் பயன்படுகிறது.

சுத்தம் செய்யப்பட்ட இதன் பிசினுடன் கருப்பூ எண்ணைக் கலந்து மென்று தின்றுவர நீரிழிவு நோய் குணமாகும். மேலும், சீதபேதி, ரணங்களை போக்கவும், ஆண்மைத் தன்மை பெருகவும், நரம்பு தளர்ச்சியை சீர்செய்யவும், குருதியை சுத்தம் செய்யவும் உதவுகிறது.

நீளமாக இருக்கும் இம்மரத்தின் முட்களை, தற்போதைய குண்டுசிக்கு பதிலாக பந்தல்களில் துணி அலங்காரங்கள் செய்வதற்கு பயன்படுத்துகிறார்கள்.

தமிழகத்தைப் போலவே, இராஜஸ்தான், பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்களில் பெருமளவில் உள்ளன. அங்கே இம்மரம் "நாம் காந்தா பாபூல்" என்றழைக்கப்படுகிறது. அங்குள்ள மக்கள் இம்மரத்தை ஸ்ரீ ராமபிரானுடைய கழி என்று, புனிதமாக போற்றுகிறார்கள்.

இவ்வகை வேலன் மரங்கள் நிறைந்து "வேலங்காடு" என்றழைக்கப்பட்டு, சென்னைக்கு அருகிலுள்ள பிரசித்திப்பெற்றதற்போது "திருவேற்காடு" என்றழைக்கப்படும் அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவிலின் ஸ்தலவிருட்சமாக இம்மரம் அருள்பாலிக்கிறது.

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான அரசியல் சூழலின் பெரும்பாலான நீராதாரங்களும், அதற்கு தண்ணீர் வரும் பாதைகளும் அழிக்கப்பட்ட வரும் நிலையில் நமது பாரம்பரியமிக்க மருத்துவ குணங்கள் நிறைந்த இவ்வகை மரங்களும் அழிந்து வருகின்றன. இவற்றைபாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்வது நமது தலையாய கடமையாகும்.

**ஆதிரையன்.**

## வேதபாரதியின் பெண்மையை போற்றுவோம் நிகழ்ச்சி 2023

வேதபாரதி அமைப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்மையை போற்றுவோம் (யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்) எனும் நிகழ்ச்சியானது கடந்த 16.07.2023 ஞாயிறு அன்று சென்னை, துரைப்பாக்கம், ECR ரோடு, APL குளோபல் பள்ளி வளாகத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. இதில் சென்னை மற்றும் புறநகரங்களில் உள்ள பள்ளிகளில் இருந்து பல்வேறு வகுப்புகள் படிக்கும் பெண் குழந்தைகள் இவ்விழாவிற்கு வந்திருந்தனர். வேதபாரதி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ ராமகிருஷ்ணன் வரவேற்புரை வழங்கினார். செல்வி. உமா மகேஸ்வரி இறைவணக்கம் பாடினார். திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் அவர்கள் நிகழ்ச்சியை முன்னின்று நடத்தும் பெண் குழந்தைகளை அறிமுகம் செய்தார்.

அதனை அடுத்து யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கத்தை சிறப்பாக நடத்தி வரும் பெண்கள் குழுவினர் இதுவரை பல்வேறு ஊர்களில் நடைபெற்ற யுவஸ்ரீ நிகழ்ச்சிகளின் தொகுப்பை சின்னத்திரையின் மூலம் ஒளிபரப்ப, வேதபாரதி செயலாளர் ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்கள், வேதபாரதி நிகழ்வுகள் குறித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண் குழந்தைகள் வகுப்பு / வயது வாரியாக பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டு கலந்தாய்வு மற்றும் சிறு, சிறு போட்டிகளும் நடைபெற்றது. அதே நேரத்தில் பெற்றோர்களுக்கும் நமது கலாச்சாரம், பண்பாடு, குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு மற்றும் வேதபாரதி அமைப்பின் செயல்பாடுகள் குறித்தும் சிறப்பாக விளக்கப்பட்டது.

*மதிய உணவிற்குப் பின் ஸ்ரீவாஞ்சியம், ஸ்ரீமுரளிதர பாகவதர் குழுவினரின் நாம சங்கீர்த்தனம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி குழந்தைகளிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.*

*அதனை அடுத்து சிறப்பு விருந்தினர் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர்.சுதா சேஷையன் எம்.எஸ் அவர்கள் சிறப்புரை ஆற்றும் போது, நமது முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த ஒவ்வொரு பழக்க வழக்கங்களும் அறிவியல் சார்ந்த ஆக்கப் பூர்வமானவை என்பதனை நமது புராண இதிகாசங்களை கொண்டு மிகவும் அழகாக விளக்கினார்கள். திருச்சி திரு.சந்திரசேகர் அவர்கள் அவ்வப்பொழுது சிறிய சிறிய விளையாட்டுக்கள் மூலம் குழந்தைகளை உற்சாகப்படுத்தி போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் 100க்கும் மேலான குழந்தைகளும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர். இறுதியில் நடைபெற்ற கருத்துக்கணிப்பில் பலரும் பல்வேறு நல்ல கருத்துக்களை தெரிந்து கொண்டதாகவும், வருங்காலங்களில் இது போன்ற வேதபாரதி அமைப்பு நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் அவசியம் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. விழாவின் இறுதியில் M.S. சுப்புலட்சுமி அம்மையார் பாடிய "மைத்ரீம் பஜத" என்ற சமஸ்கிருத பாடலுடன் விழா இனிதே நிறைவுற்றது.*

*ஆசிரியர்.*

# அட்ட வீரட்டத் தலங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

## திருக்கோவிலூர் வீரட்டம்

சென்றமாத தொடர்ச்சி...

மோகனாவதாரம் முடிந்தபின் திருமால் இங்கு சிவபூஜை செய்தார். பிரமன் இறைவன் முடியைக் கண்டதாகக் கூறிய பொய்க் குற்றத்தினின்றும் நீங்க சிவபூசை செய்ததும் இங்குதான். கருடன் தன் அன்னையின் அடிமைத்தனம் நீங்க சிவபூசை செய்த தலமிது. திருமூலரும் தருமரும் வழிபட்ட தலம். திருஞான சம்பந்தர் இறைவனின் திருநடனக் காட்சி கண்ட தலமிது.

பண்ருட்டியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதியுடையது.

ஏழு நிலை ராஜ கோபுரமுடையது. கோபுர வாயிலில் இருபுறங்களிலும் சிற்பங்கள் உள்ளன. வலப்புறத்தில் திரிபுரமெரித்த கோலம் மிக அழகானது. உள்கோபுரம் ஐந்து நிலைகளை உடையது. சுவாமி கருவறை தேர் போல பதுமைகளால் அலங்கரிக்கப்பட்டு, நிழல் பூமியில் படியாதபடி கட்டப்பட்டுள்ளது. முன் மண்டபத்தில் துவாரபாலகரை வணங்கி திரிபுராந்தகர் உற்சவரை வணங்கலாம். மூலவர் சந்திதி பெரிய திருமேனி 16 பட்டைகளுடன் கம்பிரமாகக் காட்சி தருகிறார்.

பின்னால் சோமாஸ் கந்தர் புடைப்புச் சுதை சிற்பம் உள்ளது.

அம்பாள் திரிபுரசுந்தரி சந்நிதி வலப்பால் தனிக்கோயிலாக உள்ளது. நின்ற திருக்கோலம் நிறைவான தரிசனம்.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் தேவாரம் பாடியதலம் இது. வள்ளலார் போற்றிபாடியுள்ளார்.

*இறைவன் : வீரட்டேஸ்வரன்; அதிகைநாதர்*
*இறைவி : திரிபுரசுந்தரி*
*தலமரம் : சரக்கொன்றை*
*தீர்த்தம் : கெடிலநதி; சக்கரதீர்த்தம்; சூலதீர்த்தம்*

**4. திருப்பறியலூர் வீரட்டம்**

*சோழநாட்டுத் தென்கரைத் தலங்களில் 41வது தலம். மக்கள் வழக்கில் கீழப்பரசலூர் என வழங்கப்படுகிறது. மயிலாடுதுறை - தரங்கம்பாடி பாதையில் செம்பொன்னார் கோவில் அருகே அமைந்துள்ள தலம் இது. தக்ஷனது தலையைப் பறித்ததாலும், தக்ஷகனின் யாகத்திற்குச் சென்ற தேவர்களின் பாவங்களைத் தண்டனை வழியாகப் பறித்ததாலும், இங்கு வந்து வழிபடுபவர்களின் பாவத்தை எல்லாம் பறித்துக்கொள்வார் பரமன் என்பதாலும் இதற்குத் திருப்பறியலூர் எனப் பெயர் பெற்றது.*

*பிரம்மனின் பிள்ளைகளில் ஒருவனாகிய தக்ஷன் பரமேஸ்வரனை நோக்கி அரியதவம் செய்து பல வரங்களைப் பெற்றான். அவற்றுள் ஒன்று உமாதேவியே தனக்கு மகளாக வரவேண்டும், சிவபிரானே தனக்கு மருமகனாக வரவேண்டும் என்பதும் ஆகும். இறைவனும் அவ்வாறே வரம் அருளினார்.*

*தொடரும்...*

**வாசகர் கடிதம் :**

*ஜூலை மாத புத்தகத்தில் பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் பற்றிய குறிப்புகள் ஸ்ரீ சூரியநாராயணன் மாமா மூலமாக முழுவதுமாக தெரிந்து கொண்டோம். நாங்கள் செய்த பாக்யம்.*

**ஸ்ரீனிவாசன்,** *பெரம்பூர்*

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை
பரிந்துரைத்து ஊக்க
வெகுமதியை பெறுங்கள்
₹150*
வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் பொது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code to Apply
*T&C Apply
RuPay
ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to
+91 88866 10805 (or)
Scan the QR Code
CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cardless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23 
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th August 2023




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜீவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.